**அக்டோபர்: 23**

## ஆண்டவர் நம்மை செய்யச் சொன்ன பிரதான கடமை

### வாசிக்க: மாற்கு 16:14- 20

அதன்பின்பு பதினொருவரும் போஜனபந்தியிலிருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி, உயிர்த்தெழுந்திருந்த தம்மைக் கண்டவர்களை அவர்கள் நம்பாமற்போனதினிமித்தம் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்தும் இருதய கடினத்தைக் குறித்தும் அவர்களைக் கடிந்து கொண்டார். பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்: நவமான பாஷைகளைப் பேசுவார்கள். சர்ப்பங்களை எடுப்பார்கள்: சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது: வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசினபின்பு, பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்.





இன்றைக்குரிய தியானம் மிக மிக முக்கியமானதொன்றாகும். ஏனெனில் நம் ஆண்டவர் தாம் செய்யவேண்டிய கடினமான பகுதியை செய்து முடித்து விட்டார். இப்போது நாம் அவருக்காக இந்த உலகத்தில் செயல்பட வேண்டிய இடத்தில் இருக்கிறோம். இது ஒரு பிள்ளையை தகப்பன் செய்யசொல்கிற கடமையாக நேசத்தால் கட்டளையிட்டு சென்றார். சிலுவையிலே தாகம் என்று சொல்லி வெளிபடுத்தியதை தான் இங்கே தெளிவாக விளக்கியுள்ளார். இதற்கு முன்பு தந்த செய்திகளும், ஆவிக்குரிய வரங்களும் வல்லமையும் இந்த வேலை செய்யவே நமக்கு அருளப்பட்டது என்றால் மிகையாகாது. அவர் சொன்னது இவ்வளவு தான். நீங்கள் உலகமெங்கும் போய்,
"சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்."
சுவிசேஷத்தை ஏற்றுகொள்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் சேர்க்கபடுவர். சுவிசேஷம் மற்றவர்க்கு சொல்வது என்றால் என்ன?
1) ஆண்டவராகிய இயேசு நம் பாவத்திற்காக சிலுவையில் மரித்தார். (நாம் ஏற்கனவே செய்த பாவத்தின் தண்டனையிலிருந்து தம்மை மன்னிப்பதற்காக)
2) மூன்றாவது நாள் நம் உயிரோடு எழுந்து நம்மோடு ஆவியினவராக எப்போதும் இருக்கிறார். (இப்போது நமக்கெதிராக உள்ள பாவத்தை மேற்கொள்வதற்காக)
3) குறிப்பிட்ட நாளில் நம்மையெல்லாம் பரலோகம் அழைத்து செல்ல இயேசப்பா மறுபடியும் வரப்போகிறார். இந்த செய்தியை நம் நண்பர்களுக்கும், நம்மோடு தொடர்பு கொள்பவர்களுக்கும் பகிர்ந்து அவர்களை நரகம் செல்லாதபடி காப்பதே சுவிசேஷம். இதை செய்பவர்களுக்கு உதவி செய்யவே அற்புத அடையாளங்களும் அதிசயங்களும் தரபட்டது. செல்லங்களா நீங்களும் சுவிசேஷத்தை உங்க ஸ்கூல் பிரண்ட்ஸிடம் பகிர்ந்து பாருங்களேன். ஆண்டவருடைய அற்புதத்தையும் ரசியுங்களேன்.

பூமியின் சகல குடிகளே, கர்த்தரைப் பாடி, நாளுக்குநாள் அவருடைய ரட்சிப்பைச் சுவிசேஷமாய் அறிவியுங்கள். 1 நாளாகமம் 16:23

## ஜெபம்

பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, உங்க சுவிசேஷத்தை முழுபெலத்தோடு செய்ய கிருபையும், ஞானமும், விசுவாசமும் தாங்கப்பா. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.

